www.padippakam.com


# புதியபூமி
PUTHIYA POOMI

சுற்று 7 ● 1993 மாசி 20 ● விலை ரூபா 6.00 ● சுழற்சி 2


## ஆண்டத் தொழிற்சாலைக்கு டட்டா

அரசாங்கத்திற்கு மிகவும் விசுவாசமான அதிகமான ஆடைத்தொழிற்சாலைகளின் அதிபர் ஆடைத்தொழிற்சாலைகளை அமைக்க வாங்கிய பலகோடி ரூபா வங்கி கடன்களில் குறிப்பிட்ட மாதத்தவணைப்பணத்தை கூட கட்ட முடியாது திண்டாடுகின்றார். அவர் நாட்டை விட்டு ஓடிவிடாமல் இருக்க அவருக்கு வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிமறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆடைத் தொழிற்சாலைகளின் ஆயுட்காலம் எத்தனை மாதங்கள்?

தனியார் அட்டூழியத்தை எதிர்த்துப் போராட

சுயாட்சியை வென்றெடுக்க

எதிர்காலச் சந்ததிக்கு வாழிகாட்டி வாழ்வமைக்க

# மலையகத்தில் புதிய அரசியல் தலைமையை பலப்படுத்துவோம்

மலையக மக்களிடையே இது நமது நாடு; நாம் ஒரு தேசிய சிறுபான்மை இனம்; நமது தனித்துவத்தை சிதைய விடக்கூடாது என்ற ஒருவகை தேசிய உணர்வு வளர்ந்து வருகிறது. இதனை சரியான பாதையில் வழிநடத்த இளம் தலைமுறை அரசியல் தலைமை நிதானத்துடன் செயற்பட வேண்டும். ஏற்கனவே உருவாகியுள்ள தொழிலாளி வர்க்க அரசியல் வழி நடந்து வரும் அத்தலைமையைப் பலப்படுத்தி முன்னெடுக்க வேண்டியது மலையக இளம் தலைமுறையினரின் கடமையாகும்.

மலையக மக்கள் ஒரு நிரந்தர அட்ரஸ் இல்லாத கூட்டம் என்ற நிலைமை இன்னும் தொடர்கின்றது. தனியார் கம்பெனிகள் தோட்டங்களை பொறுப்பேற்றதன் பிறகு என்றுமில்லாதவாறு தோட்டங்களில் தொழிற்பிணக்குகள் அதிகரித்துள்ளன. தொழிலாளர்கள் கசக்கிப்பிழியப்படுகின்றனர். இவ்வாறு நாளுக்கு நாள் மலையக மக்கள் மீது அடக்குமுறைகள் திணிக்கப்படுகின்றன.

இந்நிலையில் தொழிற்சங்கங்கள் நிராகரிக்கப்பட முடியாதனவாயினும் அவற்றால் மலையக மக்களை ஒரு எல்லைக்கப்பால் அழைத்துச் செல்லமுடியாது என்பது தெளிவாகிவிட்டது. ஏட்டிக்குப் போட்டியாக தொழிற்சங்கங்களை உருவாக்குவதனாலோ, தொழிற்சங்கங்களில் அரசியல் பிரிவுகளை ஏற்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு வெல்லுவதனாலோ மலையக மக்களிடம் வளர்ந்து வரும் தேசிய உணர்வை சரியாக வளர்த்தெடுக்க முடியாது. மலையக மக்களுக்கு அரசியல் பொருளாதார சமூக ரீதியான வளர்ச்சியை காணமுடியாது.

தேசிய அரசியல் வர்க்க அரசியல் என்று கூறிக்கொண்டு பாராளுமன்ற பாதையை மட்டும் தரிசிக்கும் அமைப்புகளால் மலையக மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன என்பது தெரிந்ததே. அவர்கள் மலையக மக்களின் தனித்துவத்தை ஏற்க மறுப்பதுடன் மலையக யதார்த்த நிலைமையை புறக்கணித்து மலையக மக்களை பயன்படுத்தி தாங்கள் வளர்ச்சியடையவே விரும்புகின்றனர்.

யூ. என். பி. அல்லதுவேறு அரசாங்கங்களுக்கு முட்டுக்கொடுக்கும் அரசியல் சாணக்கியத்தால் கிடைத்த அற்ப சொற்ப சலுகைகளை விட மலையக மக்கள் பட்ட, படுகின்ற துயரங்களே ஏராளம்.

மலையகமக்களை தேசிய நீரோட்டத்திருந்து தனிமைப்படுத்தி மலையகத்தார் மட்டும் என்ற குறுகிய பிரதேசவாத அரசியலால் மலையக மக்களுக்கு கிடைத்த பரிசில்கள் யாதென எல்லோருக்கும் தெரியும். அவ்வித சந்தர்ப்பவாத கருத்துக்களை முன்வைத்து காலத்திற்கு காலம் மலையகத்தில் தோன்றி மறைந்த தலைமைகள் பற்றிய கதைகள் சுவாரசியமானவை. அந்த தலைமைகளின் தவறுகளும், தோலவிகளும் மலையகத்தை பின்நோக்கி இழுத்துச் சென்றுள்ளது.

மக்களை சம்பந்தப்படுத்தாத குறிப்பிட்ட சிலரின் தீவிரவாத நடவடிக்கைகளால் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் ஏற்பட்ட, ஏற்படுகின்ற பாதிப்புகளால் மலையகமக்களுக்கு ஏற்பட்டுளள பின்னடைவுகள் மிகவும் வெளிச்சமானவையே. மேற்படி போக்குகளை முன்தள்ளியவர்கள் யாவரும் தோற்றைய மனிதர்களாகி விட்டனர்.

தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும், ஆசிரியர், மாணவர்கள், வ்யாபாரிகள உள்ளிட்ட சகலரையும் ஐக்கியப்படுத்த ஒரு நோமையான சரியான தலைமையொன்றே அவசியம். மலையக யதார்த்தத்தை விளங்கி அதன் அடிப்படையிலான மக்கள் தலைமை பலப்படுத்தப்பட வேண்டும்.

எவ்வாறு தனியாக ஒரு கட்சியின் கீழ் மட்டும் இலங்கையின் முழு மக்களையும் அணிதிரட்டுவது என்பது நடைமுறைச் சாத்தியமில்லையோ அவ்வாறே சினேகபூர்வமான ஒரு கட்சியை இன்னொரு கட்சி புறக்கணித்து முன்னேறவும் முடியாது. ஒரு பிரதேசத்தில் அல்லது ஒரு தனித்துவமான சமூகமாக வாழும் மக்கள் கூட்டத்திற்கென தனியான ஒரு அமைப்பு மட்டுமே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் சாத்தியமில்லை.

எனவே மலையக மக்களின் அமைப்புகளை ஒன்றிணைக்க அல்லது அமைபுகளுடன் ஒன்றிணைய விரும்பும், ஒன்றிணைந்து நேர்மையாக இயங்க முன்வரும் ஸ்தாபனமொன்றே மலையக மக்களுக்கு அவசியமானதாகும். அத்துடன் அவ்வமைப்பின் தலைமை ஏனைய பிரதேச, தேசிய ஸ்தாபனங்களுடன் இணைய வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படக்கூடியதாக இருக்கவேண்டும்.

இனவாத, பிரதேசவாத, குறுகிய அரசியல், தொழில் சங்க நோக்கங்களுக்கப்பாற் இயங்கும் அமைப்பை நாடி அதன் தலைமையைப் பலப்படுத்துவதே மலையக மக்களுக்கு முன்னுள்ள கடமையாக இருக்க முடியும். இதில் மலையகத்தின் இளைய தலைமுறையினரின் பொறுப்புமிக்க பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும்.

அந்த அடிப்படையில் மலையகத்தில் ஏற்கனவே உருவாகி இருக்கும் தொழிலாளி வர்க்க ரீதியான புதிய தலைமையைப் பலப்படுத்துவதே எம் முன்னுள்ள இன்றைய பிரதான கடமை ஆகும்.

## சண்முகதாசன் தன்னலம் கருதாத அரசியல்வாதி

### புதிய ஜனநாயக கட்சி அனுதாபம்

சண்முகதாசன் அவர்கள் தன்னலம் கருதாத இடதுசாரி தலைவரும், சிறந்த தொழிற்சங்கவாதியுமாவார். இலங்கையின் இடதுசாரி அரசியல் வரலாற்றிலும், திரிபுவாத சோஷலிஸத்துக்கு எதிரான சர்வதேச அரசியல் வரலாற்றிலும் அவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்:

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண பிரிவு) யின் தலைவர் என். சண்முகதாசனின் மறைவு குறித்து புதிய ஜனநாயக கட்சி விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவிக்கபபட்டுள்ளது.

புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா விடுத்துள்ள அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் இடதுசாரி அரசியலில் முக்கிய பங்கை வகித்த அவர் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கொள்கையை இறுதிவரை உறுதியாக கடைபிடித்து வந்தவராவார். 1960 களில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்கள் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்திற்கு ஆபத்தானவை என்பவை முன்னுணர்ந்து செற்பட்டார்.

சோஷலிஸ அரசியற் கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்ட அவர் தேசிய ஐக்கியம் பற்றி வலியுறுத்திய அதேவேளை தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் எழுப்பவார். அத்துடன் குறுகிய இன பிரதேச வாதத்திற்கும் எதிராக கடுமையாக போராடி வந்தவராவார்.

வடபகுதியில் நிலவிய சாதிக்கொடுமைகளுக்கு எதிராக கட்சி முன்னெடுத்த

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பயணம் ஓர் அன்றாட தேவை!

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பெருநிலப் பரப்பையும் இணைத்து கடல் நீரேரியைக் கடக்கும் கிளாலிப் பாதையூடான பயணத்தை தடுத்து நிறுத்தும் செயலும் நியாயமற்றது, இதனை மனிதநேயம் உள்ள எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வழியின் ஊடாக பிரயாணம் செய்வோர் உல்லாசப் பயணிகள் அல்ல. வீடு வாசல் காணி சொத்துகளை உற்றார் உறவினர் தாய் தந்தை சகோதரரை பறிகொடுத்து கால்பாதி வயிற்றோடு உயிரைத் தானும் வைத்திருக்கத் துடிக்கும் யாழ் மக்களின் உயிர் காக்கும் பயணம்தான் இங்கு நடைபெறுகிறது. சகல வழிகளிலும் புறம் தள்ளப்பட்டு உணவு எரிபொருள் மருந்து இன்னும் அத்தியாவசியப் பொருள் எதுவுமின்றி அமுக்கப்படும் மக்கள் தங்கள் தொழிலை, உணவை பெற்றுக் கொள்ளத்தான் பிரயாணம் செய்கிறார்கள். இந்தப் பாதையின் ஊடேதான் யாழ் குடாநாட்டின் உயிரே தங்கியுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# யார் பயங்கரவாதி

பெரு நாட்டின் ஆயுதமேந்திய புரட்சிகர சக்தியான ஸந்தேரோ லுமினோஸா (ஒளிரும் பாதை) இயக்கத்தின் தலைவரான அபிமால் குஸ்மான் (தோழர் கொன்ஸாலோ) அரசாங்கத்தின் இரகசிய பொலிஸ் பிரிவினரால் போன வருடப் பிற்பகுதியில் கைப்பற்றப்பட்டார். அவரைக் கொல்வதற்கு வாய்ப்பில்லாததால் அவரைச் சிறைப்பிடித்து வழக்குத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் பெரு ஆட்சியாளர்கட்கு ஏற்பட்டுள்ளது. அவரை ஒரு பயங்கரவாதக் குற்றவாளி எனக் காட்டி மரண தண்டனை விதிக்க விரும்பும் அரசு மீண்டும் பெருவில் மரண தண்டனையைப் புகுத்த முனைகிறது. இதற்கெதிரான ஆட்சேபனைக் குரலகள் மனித உரிமை இயக்கங்கள் மத்தியில் ஓங்கி வருகின்றன; அதேவேளை முதலாளித்துவ நிறுவனங்கள் பெரு பற்றிய பொய்களைப் பரப்ப முனைகின்றன.

பெருவின் உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக பெருவின் கணிசமான ஒரு பகுதியில் ஸந்தேரோ இயக்கமே அதிகாரம் செலுத்துகிறது. பிறலத்தின் அமெரிக்க நாடுகளிற் போன்று நிராயுதபாணியான மக்கள் பெருமளவிற் கொல்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் அரசஆயுதப் படைகளாலேயே கொல்லப்படுகின்றனர். இந்த நிலையினில் மரணங்கள் அனைத்தையும் ஸத்தோராவின் தலையிற் சுமத்தித் தப்பிக்கொள்ள முனையும் அரசுக்கு வற்றும்வரை பெருளவச் சுரண்டும் அமெரிக்க அரசு ஆதாரமாக நிற்கிறது. பெருவில் ஒரு சாவாதிகாரியாக தன்னை மாற்றிக்கொண்டுள்ள ஃபூஜிமோரி என்ற அமெரிக்க எடுபிடியாளரின் ஆட்சியின் ஜனநாயக மறுப்பையும் மனித உரிமை மீறல்களையும் உலகின் சகல முதலாளித்துவ ஏடுகளும் அலட்சியம் செய்கின்றன.

ஸந்தேரோவை ஜே.வி.பி.யுடனும் விடுதலைப் புலிகளுடனும் ஹமேர்ரூஜ் (காம்போஜ வடுதலல இயக்கம்) சக்திகளுடனும் மேலோட்டமாக ஒப்பிட்டு ஒரே கல்லில் பல மாங்காய்களை விழுத்தும் முயற்சியிற் சில 'முற்போக்குப்' பத்திரிகையாளர்களும் இறங்கியுள்ளனர்.

ஸந்தேரோ சாதாரண மக்களைக் கொல்லுகிறது, போதை மருந்துக் கடத்தற்காரருடன் இணைந்து செயற்படுகிறது போன்ற குற்றச்சாட்டுக்களில் உண்மை எவ்வளவென்று உறுதியில்லை அவற்றில் உண்மை இருந்தாலும் ஸந்தேரோவின் தவறுகள் பெருவின் யதார்த்தமான சூழலின் பின்னணியில் வைத்தே விமர்சிக்கப்பட வேண்டும். பெருவாரியான கொலைகட்கும் கொக்கோன் வியாபாரிகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் யாரையாவது குற்றம் சாட்டுவதனால் பெரு அரசையும் ஆயுதப் படைகளையுமே முதலிற் கண்டிக்க வேண்டும். அவர்களைக் கண்டிக்காமல் ஸந்தேரோவை விமர்சிப்பவர்கள் நிச்சயமாக மக்களின் நண்பர்களல்ல. ஸந்தேரோ இயக்கத்தின் அரசியற் பிழைகள் விமர்சிக்கப்படுவது இன்னொரு விஷயம்; தம்மை மாவோசேதுங் சிந்தனையால் வழிநடத்தப்படுவோர் என்று கூறும் ஸந்தேரோ இயக்கத்தினர் ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டில் போராட்டத்தை மட்டுமே வலியுறுத்தித் தம்மைப் பெருவின் மட்டுமன்றி உலகின் பிறபாகங்களிலும் உள்ள நேச சக்திகளிடமிருந்து தனிமைப்படுத்தியுள்ளனர். இது அவர்களது முக்கிய குறைபாடு. இன்று குஸ்மானுடைய உரிமைக்கான குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டிய சில இடங்களில் ஏன் கேட்கவே இல்லை என்பதை ஸந்தேரோ தலைமை கவனத்தில் எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் குஸ்மானைக் கொன்றொழித்தால் ஸந்தேரோ இயக்கமோ பெருவின் மக்கள் எழிச்சியோ ஓய்ந்துவிடாது இந்தப் போராட்டத்தைப் பிற்போக்குவாதிகள் என்றுமே கற்கமாட்டார்கள்.

இலங்கை அரசை விட விடுதலைப் புலிகளையும், ஜே. வி. பி,யையும் பெரிய எதிரிகளாகக் காட்டி வந்தவர்களும் இந்திய அரசைவிட பெரிய எதிரியாகக் காஷ்மீர் சீக்கிய போராளிகளைக் கருதி வருபவர்களும் குஸ்மானை மட்டுமே விமர்சிப்பதில் அதிசயம் இல்லை.

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

— அவதானி —

## ஐக்கிய மற்ற ஐரோப்பா

சோஷலிஸத்தினால் நாடுகளை ஐக்கியப்படுத்த முடியாது முதலாளித்துவத்தால் முடியும் என்பதற்கு ஐரோப்பிய பொதுச் சந்தையை ஆதாரமாகக் காட்டினார்கள்; அமெரிக்க மேலாதிக்கத்திற்கெதிராகவும் ஜப்பானிய பொருளாதார மேன்மைக்கு முகங்கொடுக்கவும் ஐரோப்பாவில் முதலாளித்துவ சக்திகள் ஐக்கியப்படவேண்டி வந்தது. இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடியின் கீழ் ஒவ்வொரு நாட்டின் முதலாளித்துவமும் தன் நலன்களுக்காகப்போராடவேண்டி ஏற்பட்டுவிட்டது. ஜேர்மன் மேலாதிக்கம் பற்றிய அச்சம் இன்று முன்னைவிட அதிகமாகி விட்டது. மேற்கு ஐரோப்பா, ஜேர்மன் ஆதிக்கத்துச்கு உட்பட்ட ஐந்து நாடுகளாகவும் உட்பட மறுக்கும் நாடுகளாகவும் பிளவுபடும் நிலை துரிதமடைகிறது.

## இஸ்ரேலிய காட்டுமிராண்டி அரசு

ஆளும் கட்சி மாறினாலும் அரசு யந்திரத்தின் வர்க்க நலன்கள் மாறாது என்பதற்கு இஸ்ரேல் நல்ல உதாரணம். இஸ்ரேலிய தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தால் நிலைமை திருந்தும் என எதிர்பார்த்தவர்கள் வாயில் மண்ணைத் தூவி விட்டதுபுதியஇஸ்ரேலிய அரசு.

நூற்றுக் கணக்கான இஸ்ரேலியக் குடிகளான பாலஸ்தீனிய மக்களை நாடுகடத்திய இஸ்ரேல் இன்று உலகின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியில் எத்தனை பேரைத் திரும்ப ஏற்பது என்று பேரம் பேசுகிறது. இஸ்ரேலிய நாடுகடத்தல் சட்டவிரோதமானது. எனவே நாடுகடத்தப்பட்ட அனைவரும் மீள வேண்டும் அதுவரை பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்ற பி. எல். ஓ. (பலஸ்தீன விடுதலை இயக்கத்தின்) நிலைப்பாடு முற்றிலும் நியாமானது.

அமெரிக்காவின் ஸியோனிஸ முதலாளிகள் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த பில் கிளின்டன் ஆட்சி இஸ்ரேலுக்கு எதிராக நடவடிக்கை எடுக் தயங்குவது புஷ் போய்க் கிளின்டன் வந்தால் அமெரிக்க ஏகாதிபத்தியம் திருந்திவிடவில்லை என்பதையே காட்டுகிறது.

## எவ்வாறு இந்த இன வெறுப்பு

குறைபாடுடையதும் மாக்ஸியத்தினின்று பிறழ்வானதும் சோஷலிஸப் பேரையுடையதுமான முன்னைய யூகோஸ்லாவியாவின் பல்வேறு தேசிய இனங்கள் தம்மிடையே இருந்த முரண்பாடுகள் மத்தியில் ஐக்கியத்தைப் பேண முடிந்தது கிழக்கு ஐரோப்பாவின் அரைகுறை சோஷலிச ஆட்சிகள் கவிழ்ந்த பிறகு இந்த முரண்பாடுகள் எவ்வாறு மேலோங்கின?

முன்னைய யூகோஸ்லாவியவின் பெரும்பான்மைத்தேசிய இனமான ஸேர்பிய இனம் கத்தோலிக்கரான குரோவேஷியரினின்று மதத்தால் மட்டுமே வேறுபட்டது. ஸேர்பியருக்கும் முஸ்லிம்கட்கும் உள்ள வேறுபாடுகாலத்தால் மிகவும் பிற்பட்டது ஸேர்பிய மக்களுக்கும் முஸ்லிம் கட்குமிடையே பகைமை என்பது அண்மைக்காலத்தில் ஸேர்பிய பேரினவாதிகளாலேயே உருவாக்கி வளர்க்கப்பட்டது.

சுமுகமாகத் தீர்த்திருக்கக்கூடிய இம்முரண்பாடுகள் இனக் கொலை யுத்தமாக வளர்த்ததில் ஸேர்பிய பேரினவாதம் மட்டுமே குற்றவாளியல்ல. தமது நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட்ட சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் முக்கியமாக ஜேர்மனி இந்த நிலைக்குக் கூடிய பங்களித்துள்ளன. இன்று முஸ்லிம்கள் நிராதரவாக உள்ள நிலையில் அவர்கள் சார்பிற் குறுக்கிடத் தயங்கும் சகல மேற்கு நாடுகளையும் பற்றி உலகின் இஸ்லாமிய மக்கள் எழுப்பும் கேள்விகள் நியாயமானவையே.

குர்திஷ் ஷியா முஸ்லிம் மக்களை காரணங்காட்டிச் சதாமைத் தண்டிக்கத் தயங்காத அமெரிக்கா ஏன் பொஸ்னியாவின் முஸ்லிம்களைத் காக்கத் தயங்குகிறது?

## ஐக்கியத்துக்கான பாட்டு

உலகில் வாழும் மனிதர் நீவிர் ஒன்று சேருவீர்
பொதுமையான பாதைகாண வந்து கூடுவீர்
என்றும் உங்கள் பசியை நீக்கும் உலகு செய்குவீர்
இன்று அதனை உமது ஆக்க உறுதி செய்குவீர்.

முன்னே முன்னே மறவீர் நீவிர்
எங்கள் வலிமை எங்கே என்றே
பசித்திடும் போதும் புசித்திடும் போதும்
முன்னே முன்னே மறவீர் நீவிர்
எங்கள் ஐக்கியம் எங்கள் ஐக்கியம்

கருமை வெண்மை பழுப்பு மஞ்சள் சகல வண்ணரும்
பழைய சண்டை பேதம் யாவும் தூர வீசுவீர்
கூடவாழும் மனிதரோடு பேசுவீரெனின்
சிந்தை ஒன்று கொண்ட மாந்தராக மாறுவீர்.

(முன்னே)

நாங்கள் இதனை உறுதி செய்ய வேண்டு மாதலால்
நாங்கள் உங்கள் உதவி தன்னை நாடிநிற்கிறோம்.
உங்கள் போன்ற மாந்தரோடு மாறுபட்டிடில்
உறுதியாக உம்மை நீவிர் உதறித் தள்ளுவீர்.

(முன்னே)

கூறு செய்து நம்மை மூடர் ஆக மாற்றவும்
என்றும் எங்கள் முதுகில் ஏறி பேலிருக்கவும்
எங்கள் பேதம் ஓய்தலின்றித் தொடருமென்பதே
எம்மை ஆளும் கொடிய கும்பல் நெஞ்சின் ஆசையே

(முன்னே)

உலகமெங்கும் வாழுகின்ற உழைக்கும் மாந்தரே
ஒன்று சேர்க உங்கள் கைவிலங்கிறுக்கவே
மிஞ்சிடாது கொடியராட்சி முடிவு கண்டிட
வலிய பெரிய படைகள் இன்று மோதுகின்றன.

(முன்னே)

(பேட்டோல்ற் ப்றெஹ்ற்றின் பாடலையொட்டிய தமிழாக்கம்)

— தமிழில்: மணி —

படிப்பகம்

www.padippakam.com



# சுயநிர்ணய உரிமையும் தமிழர் போராட்டமும்

எழுபதுகளின் ஆரம்பத்துடன் தேசிய இனப்பிரச்சினை சார்பாகத் தமிழ் ஈழக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இதனை நியாயப்படுத்தும் வகையில் தமிழ் தேசியவாத சக்திகள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே தாம் பிரிவினைகோருவதாக வாதிட ஆரம்பித்தனர். இச் சந்தர்ப்பத்தில் பிரிவினையுடன் இணைத்து முன்வைக்கப்பட்ட சுயநிர்ணயக் கோரிக்கையை இடதுசாரியினர் வன்மமாக எதிர்த்தனர். இவ் விரு நிலைப்பாட்டின் ஊடே பெரும் வாதிப் பிரதிவாதங்கள் இடம் பெறலாயிற்று. அன்று தமிழ் தேசியவாதத்தைப் பிரதிநிதித்துவம் செய்து நின்ற உயர்வர்க்க தமிழர் தலைமையானது இடதுசாரிகளைக் குறிவைத்து தாக்குவதில் தமது பிற்போக்கான முனைப்பினை வெளிப்படுத்தி நின்றது. மறு முனையில் இடதுசாரிகளோ தமிழர் தலைமையின் பிற்போக்குத்தனத்தை எதிர்ப்பதாகக் கூறி தமிழ் மக்களது நியாயமான உரிமைகளுக்கு எதிராகவும் செயல்படஆரம்பித்தனர். இடதுசாரிகள் எனப்படுவோரில் பலதரத்தினர் உள்ளடங்கி இருந்தனர் என்பது கவனத்திற்குரியது. மரபு ரீதியான மார்க்சிசக் கட்சிகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் வீழ்ந்து தேசிய முதலாளித்துவத்துடன் ஒன்றிணைந்து நின்றனர். இவர்கள் அங்கம் வகித்த ஐக்கிய முன்னணி அரசின் புதிய அரசியல் யாப்பு தமிழ் மக்களை தேசிய வாழ்வில் இருந்து அதிக அளவுக்கு அந்நியப்படுத்திக்கொண்டது. அந்த யாப்பின் பிதாவெனக் கூறப்பட்டவர் பிரபல இடதுசாரித் தலைவர்களில் ஒருவராக இருந்த கொல்வின் ஆர் டி சில்வா ஆவார். அவர் தோட்டத் தொழில் துறை அமைச்சராக இருந்து கொண்டே தோட்டத்தொழிலாளர்கள் மாதச் சம்பளம் கேட்டவேளை உலகில் எந்தவொரு நாட்டிலும் அப்படி மாதச் சம்பளம் வழங்கப்படுவதில்லை என வாதிட்டவர் என்பதும் நினைவுகொள்ளத்தக்கதாகும்.

**தமிழர் போராட்டத்தின் இருபது வருடகால நடைமுறை அனுபவங்கள் உரிய வகையில் மறு மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.**

இவ்வாறு பாராளுமன்ற இடதுசாரிகள் அறுபதுகளின் நடுக்கூறுகளுக்குப் பின் தமிழர் பிரச்சினையில் தாங்கள் முன்பு வகித்து வந்த நிதானமிக்கதும், வர்க்க சார்பு கொண்டதுமான நிலைப்பாட்டை படிப்படியாக மாற்றிக் கொண்டே வந்தனர். அறுபதுகளின்பிற் கூறுகளிலே இவ் இடது சாரிகள் பச்சையாகவே வகுப்புவாதம் பேசுவதற்கும், சந்தர்ப்பவாதமாக நடப்பதற்கும் தங்களைத் தகவமைத்துக்கொண்டனர். அதனால் ஐக்கிய முன்னணி அரசில் பங்குகொள்ளும் தகுதியையும் பெற்றனர். இவர்கள் தமிழர்களுக்கு எதிராக மட்டுமன்றி இந்நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாகவும் ஆளும் வர்க்க நிலையில் நின்று துரோகம் இழைத்தும் கொண்டனர்.

இத்தகைய சந்தர்ப்பவாதப் பாராளுமன்ற இடதுசாரிகளை விட அதனை எதிர்த்து வந்த புரட்சிகர இடதுசாரிகளும் தேசிய இனப் பிரச்சினையில் தெளிவான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர்கள் மத்தியில் சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதம் இடம் பெற்றே வந்தது. ஆனால் அன்றைய சூழலில் இன்று இருக்கும் நிலை போன்ற புறநிலைமைகள் இருக்கவில்லை என்பதும் கவனத்திற்குரியதாகும். அதாவது இன ஒடுக்குமுறையின் அம்சங்கள் மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வந்தன. அன்று இன்றையதைப்போன்றபாரிய ராணுவ ஒடுக்குமுறையானது பேரினவாத வடிவில் தொழில்படவில்லை.

அதனால் நேர்மையான இடதுசாரி சக்திகளும் அன்றைய சூழலில் தூர நோக்குடன் கணிப்பீடுகளைச் செய்வதில் தவறுகளை இழைக்க முடிந்தது. அதே வேளை தமிழ்த் தேசியவாத சக்திகளின் நவ

**பூகோளன்**

நானமார்க்கம் மிகப் பெரிய அளவில் ஒரு திரட்சி பெற்ற அலையாக முன்னேறிச்செல்ல ஆரம்பித்தது. அந்த அலையின் முன்னால் வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்தி அந்தநோக்கின் ஊடே தேசிய இனப்பிரச்சினையை அணுக முற்பட்ட நேர்மையான இடதுசாரி சக்திகளினால் நின்று பிடிப்பது சிரமமாகியது. ஏனெனில் இன உனர்ச்சியின் வேகம் போதை நிலையிலேயே இருக்கக் காணப்பட்டது. நட்பு சக்திகளாகக் கூட வைத்திருப்பதற்கு தமிழ்தேசியவாத பிற்போக்கு சக்திகள் தயாராக இருக்க வில்லை. அவர்கள் இந்தியாவையும் இஸ்ரேலையும் நம்பிய அளவுக்கு இடதுசாரிகளை அரவணைக்கத் தவறினர். அது அவர்களது வர்க்க நிலைப்பாட்டின் அடிப்படை நிலையாகும்.

இந் நிலையிலே சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதத்தில் தமிழ்தேசியவாத சக்திகளும் இடதுசாரியினரும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர். இரு பிரிவினரும் சுயநிர்ணய உரிமை பற்றிய கண்ணோட்டத்தில் வரட்டுவாத நிலையையே மேற்கொண்டனர். நமதுதேசத்தின் யதார்த்த சூழலுக்கு ஏற்ற விதத்தில் சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகிக்கும் வழிமுறைகளைக் காண்பதில் இவர்கள் இரு துருவ நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். 1978ம் ஆண்டிற்கு பின்பே இடதுசாரிகள் மத்தியில் இருந்து உருவாகிய கம்யூனிஸ்ட் அணியினர் தம்மை புதிய கட்சியாக தகவமைத்துக்கொண்டு சுயநிர்ணய உரிமையின் பிரயோகத்திற்கான உரிய வழிமுறைகளைக்காணத் தலைப்பட்டனர். இதனைப் புதிய ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டின் கொள்கை அறிக்கையில் தெளிவாகக்காண முடியும்.

தமிழ்த் தேசியவாத சக்திகள் மிகவும் பிற்போக்கான வழிகளில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அடிப்படைகளை உருவாக்கினர். அதே வேளை இடதுசாரிகளில் சில பகுதியினர் தமிழர் போராட்டத்திலிருந்து முற்றிலும் தூர விலகி அதற்கு அந்நியமாகி நின்றனர். இருப்பினும் இடதுசாரி சக்திகளில் நேர்மையான பிரிவினர் தேசியஇனப் பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டிற்கு வருவதற்கு கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்கள் கடந்த காலத்தின் ஒவ்வொரு நடைமுறை அனுபவங்களையும் பட்டறிவாகக் கொண்டு யதார்த்த சூழலுக்கு ஏற்பநிதானம் மிக்க கொள்கையினை உரு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# மலையக மக்கள் ஒரு சிறுபான்மை இனம்
# அவர்களின் தனித்துவம் பேணப்பட வேண்டும்!

மலையகத்தோட்டத்தொழிலாளர்களான இந்திய வம்சாவழித் தமிழர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு ஒன்றரை நூற்றாண்டுகள் சென்றுவிட்டன. அவர்கள் இன ரீதியில் தமிழர்.வர்க்க அடிப்படையில் ஏகப் பெரும்பான்மையோர் தொழிலாளி வர்க்கத்தினரும் மற்றும்உழைக்கும்மக்களாவர் அவர்களது நீண்ட சோக வரலாறு யாவரும் அறிந்ததே. இன்று அவர்களை எதிர் நோக்கி நிற்கும் பிரதான பிரச்சினைஆழமான சிந்தனைக்குரியதாகும். அதாவது தாம் தனித்துவமான அம்சங்கள் பொருந்திய ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதை நிலை நாட்டவேண்டிய தேவையை அவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

சம்பள உயர்வு, மாதச் சம்பளம், மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான சலுகைகள் வேண்டிய கோரிக்கைகள் ஒரு புறம் இருந்து வருகின்றன. மறுபுறத்தில் பாரிய பிரச்சினையாக முன்னெழுந்து நிற்பது தமது தனித்துவமான இனத்தன்னடையாளங்கள் சிதைந்து போவதைப் பாதுகாத்து இந் நாட்டில் தமக்குரிய அந்தஸ்த்தினை நிலை நிறுத்திக் கொள்வதாகும்.

இன்று பிரசாவுரிமை வாக்குரிமை போன்ற குடியியல் உரிமைகள் இல்லாத நிலை மாற்றப் பட்டுள்ளது.ஆனால் அவர்களது நீண்ட கால வாழ்விடத்தை அங்கீகரித்து நிலம் வழங்கப்படுவது மறுக்கப்படுகிறது. இருப்பிடங்கள் சொந்தமாக்கப்படுவது பற்றிய பேச்சு புறக்கணிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி அல்லது அவனது குடும்பம் வேலையில் இருந்து நீக்கப்பட்டால் அதுவரையும் வாழ்ந்து வந்த இருப்பிடத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டால் அடுத்து எங்கே செல்வது எவ்வாறு வாழ்வது என்பதே கேள்வி. வீதி ஓரமும் மரநிழலும் தான் அவனது வசிப்பிடம். பிச்சை எடுப்பது தான் தொழில் இதற்கு அடிப்படை அவனுக்கு இருப்பிடமோ அல்லது தனது குடும்பமோ தொடர்ந்து வாழ்வதற்கு சொந்த நிலமோ இல்லாமையாகும். இந்த நிலையும் அதன் அபாயமும் அதிகரித்தே வருகிறது. இன்று தனியார் கொம்பனி நிர்வாகத்தின் கீழ் இலகுவாகத் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டுத்துரத்தப்படும் சூழல் அதிகரித்து வருகிறது.

**நமன்**

இதனாலேயே மலையகத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழி மக்களுக்கு அவர்களது நீண்டகால வாழ்விடமான மலையகத்தில் நிலம் வழங்கப்படவும், வாழ்விட உரிமை அங்கீகரிக்கப்படவும் வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது. பிரசாவுரிமையும் வாக்குரிமையும் இருந்தால் மட்டும் அவர்கள் தமது தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. அவர்கள் தங்களை தனித்துவம் மிக்க மக்கள் கூட்டத்தினராக நிலை நிறுத்திக் கொள்வதற்குரிய அடிப்படை உரிமைகள்,அம்சங்கள் போன்றனவற்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இவற்றைக் கோரவும், அதற்காகப் போராடவும்,பெற்றுக் கொள்ளவும், பின் அதனைப் பேணிப் பாதுகாக்கவும் ஓர் அமைப்பு தேவையாகிறது. அதனையே சுயாட்சி உள் அமைப்பு எனக் கேட்கிறார்கள் அதனை உருவாக்கவும்பாதுகாக்கவும், வளர்த்து முன்னெடுக்கவும் உள்ள உரிமையினையே சுயநிர்ணய உரிமை எனக் கோருகிறார்கள். இதனையாராவது பிழையாகவோ அன்றி அரைகுறையாகவோ பிரிவினை என விளங்கிக் கொண்டால் அது அவர்களது விளக்கமின்மையின் வெளிப்பாடேயன்றி சுயாட்சி உள்ளமைப்புக் கோரிக்கையின் குறைபாடல்ல. மலையகச் சிங்கள மக்கள் மத்தியில் ஐக்கியத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கு தமது தனித்துத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு இச்சுயாட்சி உள்ளமைப்பு என்ற வடிவம் தேவைப்படுகின்றது. மலையக மக்கள் இந்நாட்டின் மக்கள். அவர்கள் இந்நாட்டின் தேசிய சிறுபான்மை இனத்தினர். அவர்கள் இந்நாட்டின் உழைக்கும் வர்க்க சக்தியில் பிரதான பாத்திரத்தை வகிப்பவர்கள் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் இந்நாட்டில் வாழ்ந்து உழைத்து இன்றும் பஞ்சைகளாய், பரதேசிகளாய், வீடும் நிலமும் அற்று நிரந்தர முகவரி அற்றவர்களாய் வாழ நிர்ப்பந்திக்கும் சகல தளைகளிலும் இருந்து விடுபடுவதற்கே அவர்கள் அரசியல் அமைப்பு வாயிலாக அடிப்படையான உத்தரவாதத்தை கோருகிறார்கள்.

அதனையே சுயநிர்ணய உரிமைவாயிலான சுயாட்சி உள்ளமைப்புக் கோரிக்கையாக முன்வைக்கிறார்கள். அத்தகைய ஓர் அமைப்புதான் அவர்களின் இன வர்க்க தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் சிதையவிடாமல் பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்கான ஓரே உத்தரவாதமாக இருக்க முடியும். இதற்கு கீழான எந்த அமைப்பு வடிவமும் மலையக மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய மாட்டாது.

படிப்பகம்

www.padippakam.com



# வெள்ளை மாளிகையின் மறுபக்கம்

பதவிக்கு வரும் அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மாளிகையாகத் திகழ்ந்து வருவது வெள்ளை மாளிகை. அமெரிக்க ஏகாதிபத்திய அதிகார பீடத்தின் உயர் அலுவலகமாக இருந்து வரும் வெள்ளைமாளிகைக்கு ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றின் புகழ்பூத்த அம்சங்கள் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவது வழக்கம். ஆனால் அந்த மாளிகைக்கு இருந்துவரும் கறைபடிந்த வரலாற்று அம்சங்கள் மறைக்கப்பட்டே வந்திருக்கிறது.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாகக் கூறப்பட்ட நாளில் இருந்து ஐரோப்பிய குடியேற்றவாதிகள் அமெரிக்காவின் பூர்வீக சுதேசிய மக்களை மிருகங்கள் போன்றே வேட்டையாடி அழித்து வந்தனர் அந்த மக்களை அழித்தொழித்து அவர்களது பழமை வாய்ந்த நாகரிகங்களை சிதைவுபடுத்தியதுடன் அவர்களுக்கு காட்டுமிராண்டிகள் என்ற பட்டத்தையும் சூட்டினர். அவர்களது வளம்மிக்க நிலங்களையும், கனிவளங்களையும் கொள்ளையிட்டனர், அமெரிகக சுதேசிய மக்களின் அழித்தொழிப்பின் மீதும் அடிமைகளின் உழைப்பினாலுமே நவீன அமெரிக்கா உருவாக்கம் பெற்றது. அமெரிக்காவின் புகழ்மிக்கதாகக் காட்டப்படும் ஒவ்வொன்றின் பின்னாலும் ஒவ்வோர் இரத்தக்கறை பிடித்த வரலாறு இருந்து வருகின்றது-

அந்த வகையில் கட்டியெழுப்பப்பட்டதே அமெரிக்காவின் வெள்ளைமாளிகை. சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை போன்றவற்றைப் பாதுகாக்கும் தெய்வீகக் கடமை இந்த வெள்ளை மாளிகைக்கு இருப்பதாகவே இன்றும் பிரசாரப்படுத்தப் படுகிறது. தமது மூதாதையர்கள் எவ்வாறு கொலை வெறியாட்டத்தின் மூலம் அமெரிக்காவில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டார்களோ அதேவழியில்தான் வெள்ளைமாளிகை ஆட்சியாளர்கள் இன்றுவரை அத்தொழிலை உலகரீதியாகவும் உள்நாட்டுரீதியாகவும் செயல்படுத்தி வருகிறார்கள். உலக மக்களை ஆதிக்கம் செய்யவும் உள நாட்டில் தமது அதிகாரப்பிடியை இறுக்கி வைத்திருக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து வெள்ளைமாளிகையில் அமர்த்திக் கொள்கிறது. அவர்கள் இவ்வெள்ளைமாளிகையில் இருந்தே தமது சூழ்ச்சிகளையும் நயவஞ்சகத் திட்டங்களையும் உருவாக்கி உலகளவில் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அமெரிக்கர்களின் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்து ஆழ்ந்து நோக்கின் அவர்கள் குடியேற்றவாசிகளாகச் சென்று ஆரம்பித்த கொலை, கொள்ளை எரியூட்டல் இன்றுவரை புதுப்புது வடிவங்களில் தொடரப்படுகின்றமையை ஒருவர் காண முடியும். முதலாளித்துவ ஒழுங்கமைப்பினை மிகவேகமாக்கிய அமெரிக்க ஆளும் வர்க்கம் தனது ஏகாதிபத்திய காலகட்டத்தில் நவீன ஆயுதங்கள் தளபாடங்கள் என்பனவற்றின் மூலம் இன்று கொலைக்கு அஞ்சாத கொடூரர்களாக உலகில் திகழ்ந்து வருகிறார்கள். அவற்றை மறைக்கவும் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை பற்றிபேசிக் கண்ணீர் வடிக்கவும் தவறுவதில்லை. எனவே வெள்ளை மாளிகைக்கு 42 வது ஜனாதிபதியாக வந்துள்ள பில்கிளிங்டனும் தமது மூதாதையர்களின் வழியில் செல்லும் ஒருவரேயன்றி அவர் புதிதாக எதையும் மக்கள் சார்பாகச் சாதிக்கப்போவதில்லை. எனவே இரத்தக்கறைபடிந்த வெள்ளைமாளிகைக்கு எதிராக நமது நாட்டு மக்கள் உட்பட உலக மக்கள் விழிப்பாக இருப்பது அவசியம்.

# அயோத்திக்குப்பின் அடுத்து இடிக்கப்படுவது எது?

இந்து வெறியாட்டத்தினால் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டுவிட்டது. இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது. ஒரு மசூதி கட்டிடம் மட்டுமல்ல. இந்து முஸ்லிம் மக்கள் மத்தியிலான பிணைப்பே இடிக்கப் பட்டது. அடுத்து எழுந்துள்ள கேள்வியில் இந்துமத வெறியாட்டம் எந்த மசூதியை இடிக்கத் திட்டமிடுகின்றது என்பதேயாகும். இந்தியாவில் இந்து முஸ்லிம் பிளவு இன்று நேற்றுருவானதல்ல. அந்நிய கொலனித்துவ வாதிகள் அதனைப் பெரிதாக்கினார்கள். பின்பு அதிகாரத்திற்கு வந்தஇந்தியஆளும்வர்க்கத்தாலும் அதனைக்குறைக்கமுடியவில்லை. காந்தி ஒருவர் மட்டுமே மனப்பூர்வமாக இந்து முஸ்லிம் பிளவை விரும்பாத ஒருவராகக் காணப்பட்டார், ஆனால் அவரும் தன்னுள் ஒரு முரண் கருத்தைக் கொண்டிருந்தமை அவரது விருப்பத்தையும் சந்தேகிக்க வைத்தது. இராமராச்சியமே அக்கருத்தாகும். இராம இராச்சியத்திலிருந்து உருவாகியதே இந்து ராச்சியம் என்ற எண்ணக் கருவாகும். இந்தகைய இந்து மேலாதிக்க கருக்துக்கள் இந்தியத் தலைவர்க்ளிடம் சுதந்திரப் போராட்டக் காலங்களில் கூட முனைப்புடையதாகக் காணப்பட்டது.

சுதந்திரம் வழங்கப்பட இருந்த சமயத்தில் இந்தியாவின் முதலாவது பிரதமராக ஜின்னாவைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் வரப்போகும் இந்து முஸ்லிம் பிரிவினையைத் தவிர்க்க முடியும் எனக் காந்தி விரும்பி அதனை ஒரு ஆலோசனையாக முன்வைத்தார். அப்பொழுது அதனை முதன் முதலில் வன்மையாக எதிர்த்தவர் மத நம்பிக்கை அற்றுவரும் மதசார்பின்மைதான் தனது நிலை எனக் கூறி வந்தவருமான நேருதான் என்பது வரலாற்றுச் செய்தியாகும். இதிலிருந்து தெரிய வருவதுயாதெனில் இந்து மத ஆதிக்கம் என்ற கருத்துப் படிவம் தனியே பாரதிய ஜனதா அரசியல் தலைவர்களிடம் மட்டுமல்ல காங்கிரஸ் தலைவர்களிடமும் இருந்து வருகின்றது என்பதுதான் ஆனால் அயோத்திப் பிரச்சினையில் காங்கிரசை இக்கட்டான நிலைக்குள் தள்ளும் நோக்கிலும் தமது அரசியல் மத செல்வாக்கைப் பெருக்கும் விதத்திலும் பாரதிய ஜனதாவும் இந்து மத நிறுவனங்களும் செயலாற்றிக் கொண்டன. இந்த வழியில் செயல்பாடுகள் தொடரப்படுமா

(தொடர்ச்சி
5ம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய . . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குவதில் முயன்று நின்றனர். இவர்கள் தமிழர்கள் மத்தியில் இருந்து தம்மைப் பிரித்தெடுத்துக் கொள்ளாது அவர்கள் மத்தியில் உள்ள உழைக்கும் வர்க்க சக்திகள் மத்தியில் உறுதியாகத் தமது கால்களை ஊன்றி வைத்து அந்த அனுபவங்களின் ஊடே சுயநிர்ணய உரிமை பற்றிய கண்ணோட்டத்தில் தெளிவான முடிவுகளுக்கு தம்மை இட்டுச் சென்றனர்.

கடந்த இருபது வருடகால தமிழர் போராட்டத்தின் மூலம் சுயநிர்ணய உரிமைபற்றிய பிரச்சினையில் தமிழ்த்தேசிய வாதசக்திகளுக்கும் இடதுசாரியினருக்கும் பயன் உள்ள படிப்பினைகள் கிடைத்திருக்கின்றன. ஒருவரை ஒருவர் நிராகரித்து எதிர்ப்பதைவிட ஐக்கியப்படக் கூடிய ஒவ்வொரு முனையிலும் கருத்து வேறுபாடுகள் உள்ள போதிலும் பொது எதிரிக்கு எதிரான நிலையில் ஐக்கியப்பட்டு முன்செல்ல வேண்டிய ஒரு தேவையை இன்றைய யதார்த்த சூழல் ஏற்படுத்தி நிற்கின்றது. ஆதலினாலேயே புதிய ஜனநாயக அமைப்புக்கானபரந்த போராட்டத்தில் சுயநிர்ணய உரிமைக்கானபோராட்டமும் குறிப்பான பாத்திரத்தை வகிக்கின்றது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. இதனைப் புதிய ஜனநாயககட்சிதெளிவு படுத்தி நிற்கிறது.

இன்று முழுநாட்டிற்குமான தனி ஒரு தலைமையின் மூலம் போராட்டம் எதனையும் முன்னெடுக்கக் கூடிய சூழல் இல்லை. சிங்கள மக்கள் தேசிய ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் போராட வேண்டியவர்களாக உள்ளனர். அதேவேளை தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைப் எவ்வகையிலும் பின்வாங்கி விட்டுக் கொடுக்காத நிலையில் முன்னெடுக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். இங்கே கவனத்திற்குரியது யாதெனில் சிங்கள மக்களது போராட்டத்தை தமிழர்களும், தமிழர்களதுபோராட்டத்தை சிங்களவர்களும் ஆதரித்து நின்று பொது எதிரிக்கு எதிராகப் போராடத் தயாராக வேண்டும். இதுவே நீண்டகால ஐக்கியத்திற்கான அடிப்படையாக அமையக் கூடியது மாகும்.

தமிழர்தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்கும்போது முஸ்லிம் மக்களதும், இந்திய வம்சாவழித் தமிழ் மக்களான மலையக மக்களினதும் சுயநிர்ணய உரிமையினை முழுமையான கவனத்திற்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். கிழக்கின் முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழரும் தமது தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் பேணிப் பாதுகாப்பதற்கு அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையானது எவ்வகையிலும் மறுப்பிற்கோ எதிர்ப்புக்கோ ஆளாக்கப்படக் கூடாது. என்பதில் தெளிவுடன் இருப்பது அவசியம்.

வடக்கு-கிழக்கின் தமிழர் போராட்டம், முஸ்லிம் மக்களின் போராட்டம், மலையக மக்களின் போராட்டம் என்பன தனித்தனிக் கூறுகளாகிவிட்ட ஒரு யதார்த்த சூழலே நிலவுகின்றது. இதற்கு பேரினவாத சக்திகள் மட்டுமன்றி தமிழர்தலைமைத்துவங்களின் குறுகிய கண்ணோட்டங்களும் நடைமுறைகளும்காரணமாகி விட்டன. எனவே இம் மூன்று பிரிவினரையும்ஐக்கியப்படுத்துவது என்பது என்பது நீண்டகால நடைமுறைகளால் மட்டுமே செய்யக்கூடியதாகும். அதற்குரிய ஒரே வழி மூன்று பிரிவினர் மத்தியிலும் இன வர்க்க நிலைப்பாட்டில் தொழில்பட கூடியபுதியதலைமைத்துவத்தை கொள்கை நடைமுறைரீதியில் தெளிவுள்ளதாகக் கட்டி எழுப்புவதேயாகும்; தற்போதைய தலைமைகளை மேவி நிற்கக் கூடிய வெகுஜனப்புரட்சிகரத் தன்மைகொண்ட தலைமைத்துவம் பலம் பெற வேண்டும். அதன் மூலமே ஒருவரை ஒருவர் ஆதிக்கம் செய்யும் உள்நோக்கம் இன்றி ஒருவரை ஒருவர் புரிந்து ஏற்றுக் கொள்ளும் புதிய சூழல் போராட்டத்தின்மூலம்உருவாகமுடியும் இதுவே தமிழ் சிங்கள மக்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். எனவே ஐக்கியப்பட்ட போராட்டம் என்ற பழையக் நிலைக் சோஷத்தை வெறுமனே கொண்டிருப்பதை விட புதிய சூழலுக்கு இசைவான வகையில் ஒவ்வொரு பிரிவினரினதும் தனித்துவமான போராட்டங்களை அவ்வப் பிரதேசங்களில் முதன்மைப்படுத்துவதன் மூலமும், ஒருவர் போராட்டத்தை மற்றயவர் பகைநோக்கில் அன்றி நட்புரீதியில் அணுகுவதன் மூலமும் போராட்டங்களை புதிய தடத்திற்கு நகர்த்துதல் வேண்டும். இது இலகுவானதல்ல என்றபோதிலும் சிறிய சிறிய அளவுகளில் மேற்குறிப்பிட்ட பிரிவு மக்களிடையே சரியானவற்றை முன்னெடுக்க வேண்டும். கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கையில் இடம் பெற்றுவந்த தொடர்ச்சியான அரசியல் போராட்டங்களில் பெறுமதிமிக்க உயிர் உடமைகள் இழக்கப்பட்டு, குறிப்பாக இளம் தலைமுறை இரத்தவெள்ளத்தில் அமுக்கப்பட்டு, ஆளும் வர்க்கம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு வந்துள்ள அனுபவங்கள் நன்கு கற்று அறிவதற்கான அம்சங்களாகும்.

அதன் மூலம் சிறந்த படிப்பினைகளைக் கொண்டே தற்காலப் பிரச்சினைகளுக்கு கொள்கை வகுக்கப்படுதல் வேண்டும். இதில் புரட்சிகர முற்போக்கு சக்திகள் எனப்படுவோர் ஒவ்வொருவரும் தனி ஒரு முனையில் மட்டும் சிந்தித்து தமது அகவிருப்பு வெறுப்பு அடிப்படையில் கொள்கை வகுக்காது முழுத் தேசிய நிலைமைகளையும் கணக்கில் கொள்ளல்வேண்டும். அதேபோன்ற ஏகாதிபத்திய சக்திகளின் சதி சூழ்ச்சி என்பனவற்றின் அடிப்படைகளையும் கவனத்தில்கொண்டு சரியான கொள்கைகளுக்காகவும் நடைமுறைகளுக்காகவும் செயல்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே கருத்துக்களும் விவாதங்களும் முன்வைக்கப்படுதல் அவசியமாகின்றது. அதுவே ஆரோக்கியமான நடைமுறைப் போராட்டங்களுக்கு வழி வகுக்க உதவியாக அமையும்.

படிப்பகம்

# ஆடைத் தொழிற்சாலைகளின் மறைவில்...?

மக்களை தொடர்ச்சியாக மயக்கி வைத்திருப்பதற்கு கவர்ச்சித் திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக அறிமுகப்படுத்துவதில் தனித்திறமை பெற்றவர் ஜனாதிபதி பிரேமதாசா. ஒன்றை அறிமுகப்படுத்தி அதன் ஓட்டை, உடைசல்கள் முழுமையாக மக்கள் மத்தியில் அம்பலமாவதற்கு முன்பே அடுத்த திட்டத்தை அதிக விளம்பரத்துடன்காட்டி மக்களின் கவனத்தை திருப்பி விடுவது அவரது விஷேச தந்திரமாகும்.

பத்துலட்சம் வீட்டுத் திட்டம், வறுமை ஒழிப்பு ஜனசவியத் திட்டம் என்பனவற்றுக்குப் பின் ஆடை தைக்கும் இத் தொழிற்சாலைத்திட்டத்திற்குப் பின்னால் பல முக்கிய அம்சங்கள் மறைந்திருப்பது மறைக்கப்படுகின்றன. திறக்கப்படும் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் நானூற்றி ஐம்பது யுவதிகளும், ஐம்பது இளைஞர்களுமாக மொத்தம் ஐந்நூறு பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதன்படி ஒருலட்சம் பேருக்கு வேலைகிடைக்கிறது என்பதே பலத்தபிரசாரமாகும். ஆனால் இதுவரை அறுபது தொழிற்சாலைகள் வரையில் தான் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இருநூறுதொழிற்சாலைகளும் முழுமையாகத் திறக்கப்படுமா?என்பதும் அப்படித்திறந்தாலும்தொடர்ந்து இயங்குமா? என்பதும் கேள்விக் குறியேயாகும். அடுத்து பெண்கள் ஆகக் கூடுதலாக சேர்த்துக் கொள்ளப்படுவதன் உள்நோக்கம் குறைந்த கூலியில் கூடிய உழைப்பைப் பறித்துக்கொள்ள முடியும் என்பதாகும். பெண்களின் சமூக நிலை காரணமாக ஏதோ இதாவதுகிடைக்கிறதே என்ற ஒருவகைத் திருப்தியுடன் அவர்கள் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்சள். இதனால் அவர்கள்பொருளாதார நிலையில் மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள். சமூக ரீதியில் உடல், உளப்பாதிப்புக்களைப் பெறுகிறார்கள். வேதனம்போதாமையாலும் வேலை நேரத்தன்மைகளினாலும் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஏற்கனவே சுதந்திர வர்த்தக வலயத்தில் கொடிய எய்ட்ஸ் நோய்க்கு பெண் தொழிலாளர்கள் இரையாக்கப்பட்டு வரும்போக்கு அதிகரித்து வருகின்றது. எனவே தற்போதைய ஆடைத்தொழிற்சாலைகளிலும் அதன் அபாயம் தோன்றவே செய்யும்.

ஒரு புறத்தில் வேலை வாய்ப்பு எனக்கூறப்படும் இவ் ஆடைத் தொழிற்சாலைகளுச்கு இறச்குமதி செய்யப்படும் தையல் இயந்திரங்களின் இறக்குமதியிலும், உதரிப்பாகங்களின் விநியோகத்திலும் குறிப்பிட்ட சில தலைவர்களுக்கு ஆகக்கூடிய தரகுப் பணம் கிடைத்து வருவதாகச் செய்திகள் அடிப்படுகின்றன. அதே போன்று புடவை, நூல் இறக்குமதியிலும் தரகு வீதம் பெரும் இடங்களுக்கு செல்கிறது எனப் பேசிக்கொள்ளப்படுகிறது. மேலும் இந்த ஆலைகளை நடத்தும் கொம்பனிகளின் மூலதனக்காரர்கள் தடித்த ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்களாகவே உள்ளனர் இவர்கள் சுரண்டல், ஊழல் போன்றவற்றுக்கு அஞ்சக் கூடியவர்கள் அல்லர் வெளிநாட்டுக் கோட்டாவில் தங்கி இருக்கும் இத்தொழிற்சாலைகள் ராட்சத பல்தேசியக் கொம்பனிகளின் தயவிலேயே தங்கி இருக்க வேண்டும் எனவே அவர்களது உத்தரவுப்படி நடந்தே தீரவேண்டும்.

இவ்வாறு ஆடைத்தொழிற்சாலைசளின் பின்னால் உள்ள அம்சங்களை அவதானித்தால் அவை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பது மட்டுமல்ல இவற்றால் நாட்டின் பொருளாதாரம் எந்தளவிற்கு முன்னேற முடியும் என்ற கேள்வியே எழுகின்றது.

மேலும் இவ் ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழாக்களை மிக ஆடம்பரமாகத் திறப்பதில் ஜனாதிபதி மூதன்மைப் பாத்திரம் வகித்து வருவது அவரது அடுத்த பதவிக்காலத்தை உத்தரவாதப் படுத்தும் நோக்கத்துடன் சம்பந்தமுடையதாக விளங்குகின்றது. இரு நூறு தொழிற்சாலைகளின் திறப்பும் முடிவடைய அடுத்த ஜனாதிபதி தேர்தலும் வர ஏறத்தாள காலம் சரியாகவே இருக்கும். அப்போது இருநூறு பெரும் கூட்டங்களும் நிறைவுபெற்றதாக விளங்கும். ஒளி, ஒலிபரப்புகளும், அரசு கட்டுப்பாட்டின் கீழான பத்திரிகைகளும் இதனைமேலும் விரிவுப்படுத்தி பிரசாரம் செய்துவரும் காரணத்தால் அதன் முக்கியத்துவம் மக்கள் மத்தியில் ஒரு விதமயக்கத்தைக் கொடுக்க முடியும். எனவே ஆடைத் தொழிற்சாலைகளின் திறப்பு வேலை இன்மையைப்போக்குவதற்கான திட்டம் என்று மிகப்படுத்திக் கூறுவதை விட அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு களமாகும் என்று கூறுவதே சரியானதாகும். அத்துடன் சில சுரண்டல்வல்லாறுகளான முதலாளிமார்களுக்கும் அவர்களது கொம்பனிகளுக்கும் வாய்ப்பு வசதி கிடைப்பதையும் இவ் ஆடைத் தொழிற்சாலைகள் உத்தரவாதப் படுத்துகின்றன. இவற்றை விட மேலும் பல உண்மைகள் எதிர்காலத்தில் இவ் ஆடைத்தொழிற்சாலைகளின் மறைவில் இருந்து வெளிவரவே செய்யும். அப்போது மக்கள் மத்தியில் தோன்றி உள்ள சில மயக்கங்களும் தெளிபெற முடியும்.

# இன்றைய மலையகம்

## அட்ரஸ் இல்லாதவர்கள்

''நிரந்தர அட்ரஸ் என்று நான் எதனை கொடுப்பது என்றே தெரியவில்லை. எனது தாத்தா காலத்திலிருந்து இது ஒரு பெரிய, அடிப்படை பிரச்சினையாக இருக்கின்றது எனது பேரன் காலத்திலாவது இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமோ தெரியாது''

—ஒரு தோட்டத் தொழிலாளி

## வேலைநாட் குறைப்பு

தோட்டங்களை தனியார் கம்பனிகள் பொறுப்பேற்றவுடன் மலையக மக்கள் சொர்க்கத்தை காண்பார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் வழமையாக வழங்கப்பட்டு வந்த 26 நாட்கள் வேலை கூட குறைக்கப்பட்டுள்ளது, தோட்டத் தொழிலாளர்கள் நசுக்கிப் பிழியப்படுகிறார்கள் வேலைநாட் குறைப்பு தொடர்பாக தொழிற்சங்க பேச்சுவார்த்தைகள் பல நடந்தும் வெற்றியளித்ததாக தெரியவில்லை.

## தொழில் நீதிமன்றங்களில் அதிகமான புதிய வழக்குகள்

தனியார்துறை தோட்டங்களை கையேற்ற பிறகு தொழிற்பிணக்குகள் அதிகரித்துள்ளன. அதிகமான தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், இதனால் தொழில் நீதிமன்றங்களில் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகளவில் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர்களும், சேவையாளர்களும் வழக்குகளை தொடுத்துள்ளனர்.

## தோ: தொழிலாளர்களுக்கெதிராக அதிகமான குற்றவியல் வழக்குகள்

தோட்டக்காணிகளில் அத்துமீறி பயிர் செய்வதாகவும், வீடுகள் குடிசைகள் கட்டியதாகவும் தோட்டத் தொழிலாளர்க்கெதிராக மலையக மஜிஸ்ரேட் நீதிமன்றங்களில் அண்மைக் காலங்களாக (தனியார் கம்பெனிகள் தோட்டங்களைப் பொறுப்பேற்ற பிறகு) அதிகமான வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

காலம் காலமாக தோட்டத் தொழிலாளர்கள் பயிர் செய்துவரும் காணித்துண்டுகளை கைவிடும்படியும், முன்பிருந்தே தொழிலாளர்கள் வைத்திருக்கும் மாட்டுப்பட்டிகள், குடிசைகள் என்பவற்றை அகற்றும்படியும் கேட்டு தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு எதிராக மஜிஸ்ரேட் நீதிமன்றங்களில் வழக்குகளை தொடுத்துள்ளனர்.

## தமிழ் கிராமசேவகர்களை நியமிக்க தயக்கம்

தமிழ் மொழியும் ஆட்சி மொழி என்று கூறப்படுகின்றது. தற்போதைய அதிகமான வைபவங்களில் எமது மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள தமிழ் மக்களுக்கென அவரது செய்திகளை தமிழில் வாசிக்கிறார்.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் மலையகப் பகுதிகளில் தமிழ்ப்பாடசாலைகளில் தவிர வேறெங்காவது தமிழ்மொழிப் பிரயோகம் இருப்பதாக தெரியவில்லை.

மலையகத்தில் தமிழ் கிராமசேவகர்களை நியமிக்க நேர்முகப் பரீட்சை நடந்து முடிந்து பல மாதங்கள் கடந்துவிட்டன. இன்னும் தமிழ் கிராமசேவகர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை,

ஒரு கிராமசேவையாளர் பிரிவில் தமிழ் மொழியை பேசுபவர்கள் 50 வீதத்திக்கு மேல் வசித்தால் தமிழ் கிராம சேவகர் நியமிக்கட்பட வேண்டும். அத்துடன் கணிசமான அளவு தமிழர்கள் வாழ்ந்தாலும் சிங்கள கிராமசேவையாளருடன் மேலதிகமாக ஒரு தமிழ் கிராமசேவையாளரும் நியமிக்கப்படலாம், என்று கிராமசேவையாளர் சுற்றுநிருபம் கூறுகின்றது,

மேற்படி சுற்றுநிருபத்தின்படி மலையகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் கிராமசேவகர்கள் நியமிக்சப்பட வேண்டும்: ஆனால் நோமுகப் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு தமிழர் கூட இன்னும் கிராமசேவகராக நியமிக்கப்படவில்லை.

கடிதம்

# தமிழர் தேசிய விடுதலைப் போரும் புரட்சிகர இடதுசாரிகளும்

கடந்த புதிய பூமியில் வெளிவந்த ''தமிழர் தலைமைகளும் இடதுசாரிகளும்'' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையைப் படித்தபோது என்னுள் எழுந்த உணர்வுகளை தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டமாக இன ஒடுக்கலுக்கெதிரான ஆயுதப் போராட்டமாக பரிணமித்தும் இதுவரை வெற்றியை நோக்கி விரையாமல் சாண் ஏற முழம் சறுக்கும் நிலை ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி என் போன்ற இளந்தலை முறையினரிடம் எழுகிறது.

இடது சாரிகளே இதற்கு பொறுப்பு என்று மார்க்சிய விரோதத்தை ஊட்டிப் பழி தீர்க்கும் போக்கு தமிழர் தேசிய விடுதலைப்போரில் சில விஷமிகளால் முன்வைக்கப்பட்டு வருகிறது.

பழந்தமிழர் தலைமை பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முன் வைத்த வர்க்க விரோத செயற்பாடுகளையும் சுலோகங்களையுமுடைய அரசியல் போக்குகளையும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளின் கடந்த கால சந்தர்ப்பவாத தவறுகளையும் இனங்கண்டு பிரித்துப் பார்த்து மறுபரிசீலனை செய்வது அவசியமனதே.

இடதுசாரிகள் என்று குறிப்பிடும் போது வடக்கில் அடிமை, குடிமை முறை

(6ம் பக்கம் பார்க்க)

## அயோத்தி...

(4ம் பக்கத்தொடர்ச்சி)

னால் பழமைவாய்ந்த இந்திய நாகரிகச் சுவடுகள் அனைத்தும் மாறி மாறி அழிக்கப்படும் அபாயமே வளரும். அத்துடன் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் விருப்பங்களும்நிறைவேற வாய்ப்புகள் அதிகரிக்கும்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
PUTHIYA POOMI

117, Lower St. Andrews place Colombo - 15.

February - 20 - 1993

# தமிழ் மக்களின் பிரயாண உரிமையில் தலையிட யாருக்கும் உரிமையில்லை!

யாழ்ப்பாணத்துக்குசென்றுவரும் தமிழ் மக்கள் யாவரும் ஆபத்துக்கள் நிறைந்திருந்த போதும் கிளாலி கடற்பாதையில் துணிந்து படகுப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு பயணத்தை மேற்கொள்ளுப்பவர்களில் பலர் அண்மைக்காலமாக சடலங்களாக மிதப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன இதற்கு இயற்கை ஆபத்துக்கள் காரணமில்லை என்பது தெரிந்த விடயமே.

அண்மைக்காலமாக கொல்லப்படுபவர்கள் யாவரும் விடுதலைப்புலிகளே என்றும் விடுதலைப் புலிகளே இக்கடற்பாதையில் படகு பயணத்தை மேற்கொண்டு வருவதாகவும், அவர்களையே இலங்கை பாதுகாப்புப்படையினர் தாக்குவதாகவும் இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றது. மேலும் அரசாங்கத்துக்கு (தற்போதுதான்) இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் கிளாலி கடற்பாதையில் தமிழ் மக்கள் பிரயாணம் செய்யக்கூடாது என்றும் இலங்கை அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்துக்குப் போய்வர நீண்ட நாட்களாக பாவிக்கப்படாதிருக்கும் ஆனையிறவு பாதையையோ, பூநகரி பாதையையோ பாவிக்கும்படி இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

அதேவேளை இராணுவ காரணங்களுக்காக மேற்படி பாதைகளை பாவிப்பதை அனுமதிக்க முடியாது என்று விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் பயணம் செய்ய பாதையே இல்லாதிருக்கும் தமிழ் மக்களோ விடுதலைப்புலிகளின் மேற்படி தடையை மீற முற்படவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் தடைக்கு மத்தியிலும், இலங்கை பாதுகாப்புப் படையினர் தாக்குதலுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்துக்கு போய்வர கிளாலி கடற்பாதையையே தமிழ் மக்கள் நாடுகின்றனர். நாடவேண்டியுள்ளனர்.

கிளாலி பயண அனுபவங்கள் பயங்கரமானதெனினும் கிளாலி கடற்பாதையையே தங்களது பயணப் பாதையாக தற்போது தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ளனர்.

இதன் மூலம் கிளாலி பாதையில் பயணம் செய்யும் அவர்களது உரிமையில் யாரும் கைவைக்கக்கூடாது என்பதனையே தமிழ் மக்கள் எடுத்துரைக்கின்றனர்.

வேறுபாதையில் ஆபத்தின்றி, அமைதியாக உரிமையுடன் பயணம் செய்ய உத்தரவாதம் ஏற்படும்வரை கிளாலி கடற்பாதையில் பயணம் செய்யும் தமிழ் மக்களின் உரிமையை அரசாங்கம் மறுக்கக்கூடாது.

எனவே கிளலிாப் பயணத் தடையை நீக்க வேண்டும். பயணம் செய்யும் தமிழ் மக்களின் மீதான கொலைகளை நிறுத்தவேண்டும்.

ஆசிரியர் குழு

# வட. கிழக்கு நாட்டின் ஒரு பகுதியா?

வடக்கு-கிழக்கின் இடம் பெற்று வரும் கொடூர யுத்தத்தின் பாதிப்புக்கள் பயங்கரமானவை. அவை உடனடிப் பாதிப்புக்களை உருவாக்கி வரும் அதேவேளை நீண்டகால எதிர் விளைவுகளையும் தோற்றுவித்து வருகின்றன. அங்கு வாழ்ந்து வரும் ஒவ்வொரு மனிதரும் பாரிய தாக்கங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அரசுப் படைகளின் மும்முனைத் தாக்குதல்களும் போராளிகளின் எதிர்த்தாக்குதல்களும் முழுமையான யுத்த சூழலை நீடிக்கச் செய்கின்றன. அரசின் பொருளாதாரத் தடைகள் கடந்தஇரண்டரை ஆண்டுகளாக அமுல் செய்யப்பட்டு வந்துள்ளதால் மக்கள்விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகினறனர். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொட்டு மின்சாரம், எரிபொருள் உள்ளடங்கிய அனைத்தும் குறிப்பாக வட பகுதி மக்களுக்கு தடைவிதிக்கப்பட்ட பொருட்களாக்கி கடுமையாக்கப்பட்டுள்ளது. கல்வி சுகாதாரம் உள்ளடங்கிய சமூகத்துறைகள் யாவும் சீரழிந்துள்ளன. போக்குவரத்து என்றுமில்லாதவாறு சீர்குலைந்துள்ளது. லட்சோப லட்சம் மக்கள் அகதிகளாகவும். அபலைகளாகவும்மற்மாறப்பட்டுள்ளனர் அவர்களது உழைப்பும் வாழ்வும் முற்றாக முடமாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சம்பாந்தியத்தின் ஒரு பகுதியே இன்று அம்மக்களின் உயிர்களை ஊசலாடிய நிலையில் தானும் தக்க வைத்து வருகின்றது.

அரசு வடக்கு கிழக்கு மக்களை வாட்டி வதைப்பதன் மூலம் போராட்டத்தை பலவீனப்படுத்தி நசுக்கிவிடலாம் என கனவு காண்கிறது, தமக்கு மட்டுமேஇன மொழி மத பற்றுக்கள் இருக்கின்றன மாற்று இன மக்களுக்கு அவை இருக்கக்கூடாது. என்று எண்ணும் பேரினவாதப் போக்கின் தன்மையே ஆட்சியினரை இவ்வாறு செயல்பட வைக்கின்றது. ஆனால் இத்தகைய ஆளும் வர்க்க நிலையானது அடக்கப்படும் மக்கள் மத்தியில் தீவிர எதிர்ப்புணர்வையும் போராட்ட நிலையினையும் வளர்த்துச் செல்லவே உதவும் என்பதைப் புரிந்துகொள்ள மறுப்பதினாலேயே இன்றைய யுத்தநிலை நீடிக்கிறது.

இத்தகைய போக்கானது கடந்த நான்கு தசாப்தங்களில் சமிழ் மக்களை தேசிய வாழ்வில் இருத்து அந்நியப்படுத்த மட்டுமே உதவி வந்திருக்கிறது. அதுவே இறுதியில் தமிழ் ஈழக் கோரிக்கையின் மீதான கவனத்தைத் திருப்புமாறு தமிழ் மக்களை நிர்ப்பந்திக்கவும் செய்தது என்ற உண்மையைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். கோரிக்கை சரியா அன்றிப் பிழையா என்பதல்ல முதல் பிரச்சினை. அதன் பக்கத்திற்கு மக்களை திரும்பச் செய்த சூழலின் அம்சஙகளே மிக முக்கியமானதாகும், இன்று அரசு வடக்கு-கிழக்கு இலங்கையின் ஒரு பகுதிதான் எனக்காட்டுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட வழிகளில் நடந்து வரும் அதேவேளை ராணுவ ரீதியில் முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டு வர பகிரத்தனமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. சில இடங்களை வெறுமை அடைந்த நிலையில் வெற்றுத்தரைகளாகவும் கட்டுப்பாடு செய்து வருகிறது. ஆனால் வடக்கு கிழக்கு மக்களின் அடி மனதில் நியாயமான கேள்விகள் எழுந்த வண்ணமே இருக்கின்றன. அவற்றில் பிரதானமானதே வடக்கு கிழக்கு இலங்கையின் ஒரு பகுதியா? என்ற கேள்வியாகும் இம்மக்கள் எழுப்பும் இந்நியாயமான கேள்விக்கு உகந்த பதில் நீதியின் அடிப்படையில் வழங்கப்படாது விட்டால் எதிர்க்காலம் மேலும் இருள் சூழ்ந்ததாகவே அமைந்துவிடக்கூடும். ஆளும் வர்க்கம் இழைக்கும் தவறுகளுக்கும் துரோகத்தனத்திற்கும் ஆளப்படும் மக்கள் இரையாகி எதிர்காலத்தை இழந்தவர்களாக வேண்டியே ஏற்படும் என்பது நன்கு உணரப்பட வேண்டியதாகும். வடக்கு கிழக்கு இந்நாட்ன் ஒரு பகுதியே என்பது நிலைநாட்டப்பட வேண்டுமானால் அப்பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகள் யாவும் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் வழங்கப்படக்கூடிய அரசியல் தீர்வு விரைவான தொன்றாக முன்வைக்கப்பட வேண்டும்.

## கிளாலிப்...

(முதலாம் பக்கத்தொடர்சி)

யுத்தகளப் பதட்டம் சூழ்ந்திருக்கும் ஆனையிறவு சங்குப்பிட்டி பாதைகளினூடாக பிரயாணம்செய்ய மக்களை நிர்ப்பந்திப்பது மரணப் பொறியுள் அவர்களை சிக்க வைக்கும் செயலாகும்.

நெடுந்திவு, மண்டைதிவு, கிளாலிக் கடற் பரப்பில் நடைபெற்ற படுகொலை வரிசைகளை மக்கள் மறந்து விடுவார்களா? படுகொலை நடந்தபின் தடைவலயம் எனப் அறிவித்து இறந்த பால்குடிமுதல் பல்லில்லா கிழவர்வரை பயங்கரவாதிகள் எனப் பிரகடனப்படுத்தும் அரசினை யார் நம்புவார்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டு வசதியான பாதையை ஏற்படுத்தமுடியாத அரசு, மக்கள் தாம் கஷ்டம் பல பட்டாயினும் மரணபயமின்றி பிரயாணம் செய்யும் அதே பாதைக்கு இடைஞ்சலாவது கொடுக்காமல் இருப்பதுதான் மனிதாபியானது.

அதைவிடுத்து தனது ஆற்றாமையை மறைக்க 'தடைவலயம்' 'புலியொழிப்பு' என்ற போர்வையில் நடாத்தும் அடாவடித்தனத்தின் ஊடாக 'சட்டத்தை' 'ஒழுங்கை' நிலைநாட்டும் நடவடிக்கையின்போது தம் இன்னுயிர்களை இழக்கும் மக்கள் அச்சட்டங்களுக்கு எதிராக தம் உயிர்களை வழங்கவும் தயங்காத நிர்ப்பந்த நிலைதான் அன்றாட வாழ்வு நடத்துவதற்கான தேவைப்பாடாக இருக்கப் போகின்றது.

## தமிழர் தேசிய...

(5ம்பக்கத்தொடர்ச்சி)

என்ற சாதிய அமைப்பில் இருந்த அடக்குமுறைக்கெதிராக அச்சூழல் மார்க்சியத்தை சரியான வழியில் பிரயோகித்து தமிழர் கலாச்சாரத்தில் இரண்டுபட்ட தமிழரை ஒன்றாக்கி வைத்த புரட்சிகரச் சக்திகளைக் காணத்தவறுவதும் சிலரிடம் வியாதியாகி விடுகிறது.

இத்தகு புரட்சிகரச் சக்திகளின் தாக்கமே பாராளுமன்றப் பாதைக்கு அப்பாலான போராட்ட வடிவங்களை தமிழர் விடுதலையில் இணைத்துக்கொண்டது' 'தேர்தலே அரசியல்' என்ற பிரமையைக் களைந்து அன்றாட வாழ்வில் அரசியலை இணைத்துக்கொள்ளும் ஸ்தாபன நடைமுறை இளந்தலைமுறையினரிடம் ஏற்பட்டது.

ஈழத்து இலக்கியம் ஈழத்துக்கலை என்ற மகுடத்தில் தமிழர்களின் தன்னடையாளகளை காணச் செய்து 'இழிசனர் இலக்கியத்'தின் கால்கோளாயிருந்தது இவ்விடதுசாரி எழுத்தாளர்களின் அறிஞர்களின் விடுதலைச்செயற்பாடேயாகும். அப்போது தமிழர் தலைமை இந்தியாவை தாய் நாடாக கண்டு வெகுண்டார்களே தவிர 'ஈழத் தமிழர் தேசியம்' பற்றிய அக்கறையற்றிருந்ததுடன்; எச், எம். பி. முஹைதீனை 'யார் அந்த எச். எம்.பி. முஹீதீன்?' என்று இந்தியக் குப்பைச் சஞ்சிகைகளின் வருகையை விரும்பி முஸ்லிம்களுக்கெதிரான இனக்குரோதத்தை விதைத்தது.

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை வர்க்க கண்ணோட்டத்தில் வழிப்படுத்துவது என்பதனை; சிங்கள-தமிழ் மக்களை இன்றைய நிலையில் ஒரே ஸ்தாபனத்தில் ஐக்கியப்படுத்தி சோசலிசத்துக்காகப் போராடுவது என்று பாராளுமன்ற இடதுசாரிகளின் பழைய பாணியிலே நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு இனமக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமையின் முழு முதற் பிரயோகம் பிரிவினை மட்டுமே எனக் குறுக்கிக் கொள்வது மூன்றாமுலகில் பொருத்த மற்றதும், ஏகாதி பத்தியச் சூழ்ச்சிகளுக்கு விலைபோகக் கூடியதுமாகவே அமையும் என்பதுடன் நடைமுறை அனுபவம் தரும் பாடத்தில் நண்பர்களை எதிரிகளாக்குவதும் எதிரிகளை நண்பர்களாக்குவதிலுமே போய் முடியும்.

புதிய உலக சூழலில் நவகாலனித்துவ பிராந்திய கெடுபிடிகளில் நாம் நிதானமாக சுயநிர்ணய உரிமையை ஏற்று பிரயோகிப்பதில் வல்லமையுடையவர்களாக மாறவேண்டுமெனில் புரட்சிகர இடதுசாரிப் பாரம்பரியத்தின் பரப்பைத்தெரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர் தேசியப் விடுதலையில் சிங்கள மக்களை எதிரிகளாக்கும் அவலம் போக்கப்படவேண்டுமெனில் அவர்களை ஒரே ஸ்தாபனத்தில் அணி திரட்டுவதோ ஆதரவு பெறுவதோ என்பதல்ல இன்னும் ஒரு படி குறைவாக அவர்களின் அனுதாபம் பெற்றாலே போதுமானது. எனவே குறுந்தேசியவாதக் குறைபாட்டை தேசிய விடுதலைப் குணாம்சத்தியிலிருந்து அப்புறப்படுத்துவதுடன் முஸ்லிம், மலையக மக்களின் ஆதரவைப் பெறுவதற்குமான புதிய நடைமுறைகளை புரிநதுணர்வை உருவாக்க வேண்டும்.

சீ. சத்தியரூபன்
கொழும்பு-6

## சண்முகதாசன்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

போராட்டம் நடவடிக்கைகளில் முக்கிய பங்கை வகித்தார்.

மலையகத்தில் சக்தி வாய்ந்த இடதுசாரி தொழிற்சங்கமொன்றை கட்டிவளர்ப்பதில் கூடிய கவனம் செலுத்தி பாடுபட்டார்.

சுயநிலமில்லாத அந்த அரசியல்வாதியின் நினைவை இலங்கை மக்கள் மனதிலிருந்து பிரிக்க முடியாது.

இப்பத்திரிகை 117, கீழ் சென் அன்ரூஸ் இடம், கொழும்பு-15ல் வசிக்கும் இளையதம்பி தம்டையா அவர்களால் விவேகானந்தா மேடு, இல. 98ல் உள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் 20-02-93ல் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகும்.

படிப்பகம்